**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**முன்னிலை: செல்வி.சு.அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**
**2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை**
**இ.ம.எண்.1/2026**
**இன்**
**அ.வ.எண்.15/2026**

இல்லத்து பிள்ளையார் மண்டபம்(மடம்)பழனி,

அதன் செயலாளர்

திரு. சோமசுந்தரம் ...மனுதாரர்/வாதி

**–எதிர்–**

திரு.சே.ஜெயகிருஷ்ணன் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது 10.04.2026–ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திருமதி.B.தேன்மொழி, மற்றும்** வழக்கறிஞர் **திருமதி.B.லத்தீஷ்** ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.பழனிச்சாமி,** அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

இம்மனுவை அனுமதித்து வழக்கினை Withdraw செய்து கொண்டு, இதே பரிகாரத்தோடு புதிய வழக்கினை தாக்கல் செய்ய உரிமையியல் நடைமுறைச்


APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.04.27 17:18:48 +0530

சட்டம் **கட்டளை 23 விதி 1 –**ன் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுவின் சுருக்கம்:

2.1. வழக்கு சொத்தில் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ மற்றும் முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது வழக்கு நம்பராகும் போது பிராதில் தவறுள்ளது என திருப்பப்பட்ட சமயம் மீண்டும் வழக்கை தாக்கல் செய்யப்பட்ட போது கவனக்குறைவால் பிராதிலிருந்த சொத்து விபரம் உள்ள பகுதி தாளினை விடுப்பட்டு மீதமுள்ள பிராது தாள்களுடன் தைத்ததால் மேற்படி பிராதிலுள்ள சொத்து விபரம் தெரியாமல் விடுப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி பிராதில் ஏற்பட்ட தவறினால் இந்த வழக்கினை Withdraw செய்து கொண்டு, மேலும் இதே பரிகாரத்தோடு புதிய வழக்கினை தாக்கல் செய்ய அனுமதி கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி தவறு தெய்வாதீனமான ஒன்றாகும் தவிர வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்றும், இந்த மனுவினை அனுமதித்து வழக்கினை Withdraw செய்துகொண்டு, மேலும் இதே பரிகாரத்தோடு புதிய வழக்கினை கஷ்டங்களும் ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஏற்பட்டுவிடும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எதிருரையின் சுருக்கம் :–

3.1. வாதி, பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை உத்திரவு கேட்டு பிராது தாக்கல் செய்திருப்பதில் C.P.C. Order 7, Rule 3–ல் கண்டுள்ள சரத்துக்களின்படி பிராதில் அசையா சொத்துக்களின் அனைத்து விபரங்களையும் பிராதில் கொடுக்கவில்லை என்றும், மேற்படி சரத்துககளின்படி அசையா சொத்துக்கள் மீது பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்கு



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.04.27 17:18:56 +0530

சம்பந்தப்பட்ட அசையா சொத்துக்களை அடையாளம் காணும் அளவுக்கு அதன் சர்வே எண்கள், நான்குமால்கள் Settlement பதிவேடுகளில் உள்ள எண்களை கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்றும், ஆனால் இந்த பிராதில் எந்த இடத்தி'லும் தாவா சொத்து விபரம் துலக்கப்படவில்லை என்றும், சொத்து விபரம் கொடுத்தால் தான் வாதிக்கு இந்த வழக்கில் வியாஜ்ஜியமூலம் இருக்கும் என்றும், பிராதில் சொத்து விபரம் கொடுக்கப்படவில்லை என்பதை மனுதாரர் இந்த மனுவில் தெளிவாக ஒப்புக் கொண்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2. மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது வழக்கு நம்பர் ஆகும் போது பிராதில் தவறு உள்ளது என திருப்பப்பட்ட சமயம் மீண்டும் வழக்கை தாக்கல் செய்யப்பட்ட போது கவனக்குறைவால் பிராதில் இருந்த சொத்து விபரம் உள்ள தளினை எடுத்துவிட்டு மீதமுள்ள தாள்களோடு பிராதை தைத்ததால் சொத்து விபரம் இல்லாமல் பிராது தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என சொல்லியிருப்பது சுத்த பொய் என்றும், ஆரம்பத்தில் இருந்தே சொத்து விபரம் கொடுக்கப்படவில்லை என்றும், இந்த பிராதினை ஆரம்பத்தில் தாக்கல் செய்த போதும் அதனை மீண்டும் கோர்ட்டில் தாக்கல் செய்த போதும், எக்காலத்திலும் சொத்து விபரம் இணைக்கவில்லை என்றும், மேற்படி ஆரம்பத்தில் இருந்தே இந்த வழக்கின் சொத்து விபரம் இணைக்கப்பட்டதற்கான ஆதரங்கள் ஏதும் இல்லை என்றும், மேற்படி தாவா சொத்துக்களே இல்லாத போது எப்படி மீண்டும் புதிய வழக்கினை தாக்கல் செய்ய முடியும் என்றும், மேலும் இந்த பிராதில் பிரதிவாதி மீது தெளிவான குற்றச்சாட்டுகள் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.04.27 17:19:25 +0530

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் எழுகின்ற பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>6. தீர்வு:</u>**

6.1. அசல் வழக்கினை திரும்ப பெற்று கொண்டு, இதே பரிகாரத்தோடு புதிய வழக்கினை தாக்கல் செய்ய அனுமதி வழங்க கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது தாவா வழக்கு சொத்தில் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ மற்றும் முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில், அசல் வழக்கை தாக்கல் செய்யும் சமயம் பிராதில் சொத்து விவரம் குறிப்பிடப்பட்டது என்றும் பிராதை கோப்பில் எடுக்க மீண்டும் திரும்ப சமர்ப்பித்த சமயத்தில் தவறுதலாக சொத்து விவரம் உள்ள தாளை சேர்க்காமல் பிராது சமர்ப்பிக்கப்பட்டது என்று வாதிடப்பட்டது. மாண்பமை உச்சநீதிமன்றம் ***K.S. Bhoopathy and Ors. vs. Kokila and Ors. (2000) 5 SCC 458,*** என்ற வழக்கில், *“ that it is the duty of the Court to be satisfied about the existence of formal defect or sufficient grounds before granting permission to withdraw the suit with liberty to file a fresh suit under the same cause of action. Though, liberty may lie with the plaintiff in a suit to withdraw the suit at any time after the institution of suit on establishing the formal defect or sufficient grounds, such right cannot be considered to be so absolute as to permit or encourage abuse of process of Court.”* என்று

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.04.27 17:19:42 +0530

கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், இம்மனுவை அனுமதிப்பதில் இருதரப்பினருக்கும் எவ்வித பாகதமும் ஏற்படப்போவதில்லை என்பதை கருத்தில் கொண்டும், வழக்கில் தன்மையை பாதிக்காத வகையில், மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது நீதியில் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. அசல் வழக்கை திரும்ப பெற்றுக் கொண்டு இதே பரிகாரத்தோடு புதிய வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை,

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.04.27 17:19:52 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

**இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.04.27 17:19:59 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**